1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தகவல் இல்லை. ஆனால், நிழற்படம் எடுப்பது, ஒளிப்பதிவு செய்தல், படம் கழுவுதல், படத் தொகுப்பு போன்ற பணிகளில் பயிற்சி பெற்றவர்கள் திரைப்படத் தொழிலில் இப்பொழுது ஈடுபட்டு செல்வாக்கோடு இருக்கிறார்கள் என்கிற தகவல் இருக்கிறது.

திரு. எம். முத்தையா : தொழில் நுட்பக் கல்லூரியில் பயிலுகிறவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த ஆண்டு சேர்க்கப்பட்டவர்கள் மொத்தம் 41 மாணவர்கள். ஒவ்வோர் ஆண்டும் பத்துப் பதினைந்து பேர்கள்தான் அதில் பயிற்சி பெற்றுப் பட்டம் பெறுகிறார்கள். இந்த ஆண்டு சேர்க்கப்பட்ட 41 பேர்களில் ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவர்களும், பாக்வார்டு க்ளாஸைச் சேர்ந்தவர்களும் 14 பேர்கள். பார்வேர்டு க்ளாஸைச் சேர்ந்தவர்கள் 17. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஐவர். கேரளாவைச் சேர்ந்தவர்கள் 2.

திரு. நா. வீராசாமி : இந்த ஆண்டு 41 மாணவர்கள் சேர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். எல்லோருமே மாணவர்களாக இருக்கிறார்கள். நடிப்பில் பெண்களும் வந்தால்தான் நடிப்புத் தொழிலில் அவர்களுக்கும் அதிகமான வேலை வாய்ப்பு கிடைக்கும். எனவே, பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லையென்றால் இனியாவது சேர்த்துக்கொண்டு பயிற்சி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியொரு யோசனை தெரிவிக்கப்பட்டது. முதலில் நடிகர்கள் பயிற்சி மாத்திரம் நடைபெறட்டும், நடிகைகள் பயிற்சியை பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது.

நாடக அரங்குகள்.

* 327. வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாடக அரங்குகளை நாட்டுடமை ஆக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : மாம்பலம், மைலாப்பூர் போன்ற இடங்களில் இருக்கிற நாடக அரங்குகளில் குறிப்பாக ஒரு தனிப்பட்ட இனத்தவர்களுக்கு மட்டுமே அங்கு நாடகங்கள் நடத்த அனுமதி வழங்கப்படுவதாகக் கேள்விப்படுகிறோம். எனவே அப்படிப்பட்ட நிலைமை மாறுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது அந்த நாடக அரங்குகளுடைய உரிமையாளர்களைப் பொறுத்த விஷயம். அதில் அரசு தலையிடுவது இயலாது.

திரு. என். கிட்டப்பா : நாடக அரங்குகளை அரசாங்கமே ஏற்று நடத்த தற்போது இயலவில்லை என்றாலும் திரைப்பட அரங்குகளையாவது அரசு ஏற்று நடத்த முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசமும் இப்போது இல்லை.

திரு. கோவை செழியன் : அரசு உதவியோடு நடத்தப்பட்டு வருகிற மியூஸிக் அகாடமி அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை அப்படிக் கொண்டுவர வேண்டிய தேவை இருக்குமேயானால் அதை அரசு ஆராயும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Chief Minister whether there is any proposal to give long-term loans with low interest to the people who want to construct theatres and drama theatres ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த உத்தேசமும் இப்போது அரசாங்கத்திற்கு எதுவும் இல்லை.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*328. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) துறையூர் நகரத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ரூபாய் 39.00 லட்சம் நிறுவுதல் மதிப்பீட்டுச் செலவிலும் பேணுதலுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 60,000 என்று மதிப்பீட்டுச் செலவிலும் துறையூர் குடிநீர் வழங்கும் திட்டத்தின் முதல் கட்டப் பணிக்குப் பொதுப் பணித்துறையின் 5—2—1972 ஆம் நாளிட்ட 221-ஆம் எண் அரசு ஆணையில் அரசு ஏற்பளித்தது. இத்திட்டத்தின் தூநீர் ஈர்ப்புப் பெருங் குழாய் அமைப்பதற்காக தொழில் நுட்ப அடிப்படையில் ரூபாய் 29.79 லட்சத்திற்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப் பெருங் குழாய் அமைக்